தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்
19.10.2012 P.M
20.10.2012 A.M

## தமிழகத்தில் கனமழை நீடிக்கும்

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்றுள்ளதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை மற்றும் கடலோர மாவட்டங்களில் கடந்த இரண்டு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை ஒரே நாளில் இடி,மின்னல் தாக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர். பலத்த மழை காரணமாக சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை சென்னை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை நீடித்தது. ஆனால் உயிரிழப்பு குறித்து அதிகாரபூர்வ தகவல் இல்லை.

வங்கக் கடலில் வியாழக்கிழமை மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை சற்று வலுப்பெற்று மேற்கு நோக்கி நகர்ந்து தற்போது இலங்கை,தென் தமிழகம், தெற்கு ஆந்திரத்தை ஒட்டிய வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்திற்கு பெரும்பாலான இடங்களில் கனமழையை எதிர்பார்க்கலாம். குறிப்பாக சென்னை, கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும், உள்மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார்.

கடந்த 2 நாள்களாக பெய்து வரும் கனமழை காரணமாக மாநிலம் முழுவதும் ஏரிகள், குளங்கள் வேகமாக நிரப்பி வருகின்றன. காவிரி டெல்டா பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு 1000 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதனிடையே மழை, வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைச் சமாளிக்கவும், நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னை சேப்பாக்கம் எழிலகத்தில் வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் 24 மணிநேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையை கட்டணமில்லாத தொலைபேசி எண் (1077) மூலம் தொடர்பு கொண்டு மழை நிலவரம் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மழையின் அளவு (வெள்ளிக்கிழமை காலை 8.30 நிலவரப்படி மி.மீரில்): மரக்காணம் 120, கல்பாக்கம் 110, கடலூர் 80, மகாபலிபுரம், சீர்காழி, செங்கல்பட்டு 70, சோழாவரம், சிதம்பரம், ராமநாதபுரம் 60, விருத்தாச்சலம், திருத்துறைப்பூண்டி, திருச்செந்தூர் 50, தாம்பரம், பொள்ளாச்சி, கொடுமுடி, செய்யூர், மாதாவரம் 30, ராதாபுரம், பஞ்சம்பட்டி, தொண்டி, செங்கோட்டை, சென்னை, ஒரத்தநாடு, கொடவாசல், சேரன்மாதேவி, மயிலாடுதுறை உட்பட பல்வேறு பகுதிகளில் 20 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

## மிகக் குறைந்த விலைக்கு கரும்பாலை கழிவை விற்பனை செய்த ஏலம் ரத்து

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை கரும்பாலைகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தும் விதத்தில் மிகக் குறைந்த விலைக்கு கரும்பாலைக் கழிவை விற்பனை செய்த ஏலத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.

இது தொடர்பாக விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பங்குதாரர்களான கே. பூமாலை உள்ளிட்ட 5 கரும்பு விவசாயிகள் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் கரும்பாலைக் கழிவுகளின் ஏலம் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது.

அந்த ஏலத்தில் கலந்து கொண்ட மூன்று தனியார் நிறுவனங்களுக்கு மிகவும் குறைந்த விலைக்கு கரும்பாலைக் கழிவு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு சுமார் ரூ.26 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்த ஆலைகளில் பங்குதாரர்களாக உள்ள கரும்பு விவசாயிகளான எங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த மனுக்களில் மனுதாரர்கள் கூறியிருந்தனர்.

இந்த மனு மீது நீதிபதி டி. ஹரி பரந்தாமன் விசாரணை நடத்தினார். அப்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ஏ. அருள்மொழி, அண்டை மாநிலமான புதுச்சேரியில் இந்த ஆண்டு ஒரு மெட்ரிக் டன் கரும்பாலைக் கழிவு ரூ.4 ஆயிரத்து 300-க்கு விற்பனை

செய்யப்பட்டுள்ளது. அதேபோல், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் ரூ.3 ஆயிரத்து 800 முதல் ரூ.4 ஆயிரத்து 400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் ஒரு மெட்ரிக் டன் ரூ.1,372 என்ற விலைக்கு சில தனியார் நிறுவனங்களுக்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்

பட்டுள்ளது.

கூட்டுறவு கரும்பாலைகளுக்கும், விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ள இந்த ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அருள்மொழி வாதிட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கில் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்த நீதிபதி ஹரி பரந்தாமன், இந்த ஏலம் செல்லாது என்று கூறி, ஏலத்தை ரத்து செய்தார்.

மூன்று தனியார் நிறுவனங்கள் கூட்டு சேர்ந்து கொண்டு, ஒட்டுமொத்த ஏல செயல்பாடுகளையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு செயல்பட்டதும், அதன் மூலம் கரும்பாலைகளுக்கும், விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், அண்டை மாநிலங்களின் விலை நிலவரங்களைக் கூட கருத்தில் கொள்ளாமல், மிகக் குறைந்த விலைக்கு தனியார் நிறுவனங்கள் ஏலம் எடுக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் துணை போயுள்ளனர்.

ஆகவே, அந்த அதிகாரிகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தகுதியுள்ள எல்லா தனியார் நிறுவனங்களும் கலந்து கொள்ளும் வகையில் வாய்ப்பளித்து, புதிய ஏலம் நடத்தப்பட வேண்டும்.

கரும்பாலைகளுக்கும், விவசாயிகளுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு செயல்பட்ட 3 தனியார் நிறுவனங்களும் மனுதாரர்களுக்கு வழக்குச் செலவாக தலா ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

**தொடர் மழை: அணைகளின் நீர்மட்டம் உயருகிறது**



விழுப்புரம் மாவட்டத்தில் விடிய, விடிய பெய்த மழையால் அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது. நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்ததால் முக்கிய நீர் ஆதாரமாக உள்ள வீடுர், கோமுகி, மணிமுத்தா, சாத்தனூர் அணைகள் நீரின்றி வறண்டு காணப்பட்டன.

இதனால், அக்டோபர் மாதம் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டிய வீடூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. இரு நாட்களுக்கு முன்பு வரை மாவட்டம் முழுவதும் கோடையை மிஞ்சும் வெயில் அடித்து வந்தது.

வியாழக்கிழமை முதல் மாவட்டம் முழுவதும் வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர்ந்த காற்று வீசியதுடன் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அன்று இரவு ஓரு மணி நேரத்துக்கு மேல் விழுப்புரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மாவட்டம் முழுவதும் பரவலாக தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. மாவட்டத்தில் அனைத்துப்பகுதியிலும் சாலைகள் மக்கள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி கிடந்தன.

மரக்காணத்தில் அதிக மழை: மாவட்ட அளவில் நேற்று காலை 9 மணி நிலவரப்படி, விழுப்புரத்தில் 12 மி.மீ. வானூர் 11, திண்டிவனம் 21, செஞ்சி 6, திருக்கோவிலூர் 16, உளுந்தூர்பேட்டை 17, கள்ளக்குறிச்சி 7.2, சங்கராபுரம் 12 மி.மீ. என மழையளவு பதிவாகி உள்ளது. மாவட்டத்திலேயே அதிகமாக மரக்காணத்தில் 116 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. வீடூர் அணையின் மொத்த கொள்ளளவான 32 அடியில் 16.300 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. தற்போது அணையில் 51.037 கனஅடி நீர் உள்ளது. அணைக்கு 23 கனஅடி நீர் வந்து

கொண்டுள்ளது. அணைப்பகுதியில் வெள்ளிக்கிழமை 13 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கோமுகி அணையில் மொத்த கொள்ளளவான 46 அடியில் 39.70 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணையின் 352.68 கனஅடி நீ0ர் தேங்கியுள்ளது. அணைக்கு 5 கனஅடி நீர் வந்துகொண்டுள்ளது. அணைப்பகுதியில் 7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மணிமுத்தா அணையில் மொத்தமுள்ள 36 அடியில் 18.90 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதில் 47.90 கன அடி நீர் தேங்கியுள்ளது. அணைக்கு 13 கனஅடி தண்ணீர் வந்துகொண்டுள்ளது. அணைப்பகுதியில் 7.2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**திருக்கோவிலூரில்**

திருக்கோவிலூர் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் வெள்ளிக்கிழமை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

திருக்கோவிலூர் பகுதியில் வியாழக்கிழமை மாலை விட்டு, விட்டு மழை பெய்ந்தது. அன்றிரவு விடிய, விடிய மழை தொடர்ந்து பெய்ந்தது. மறுநாள் வெள்ளிக்கிழமை பகல் முழுவதும் மழை தொடர்ந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

19th oct 2012 P.M

**வம்பனில் வேளாண் கல்லூரி அமைக்கக் கோரிக்கை**

வம்பன் வேளாண் பண்ணையில் வேளாண் கல்லூரி அமைக்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஆலங்குடி அருகேயுள்ள கீரமங்கலத்தில் அச்சங்கத்தின் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திருவரங்குளம் ஒன்றிய மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் விவசாயிகளுக்கு நாளொன்றுக்கு 20 மணிநேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும், விவசாய பம்புசெட்டுகளுக்கு கூடுதல் குதிரைத் திறன் (எச்.பி) கேட்டு விண்ணப்பித்தோருக்கு உடனே வழங்க வேண்டும், ஆலங்குடியில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்த வேண்டும், ஆலங்குடி பகுதியில் விளையும் நிலக் கடலையைப் பயன்படுத்தி வனஸ்பதி ஆலை அமைக்க வேண்டும், டெங்கு காய்ச்சல் பரவலைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டுக்கு கிளை நிர்வாகி டி. ராஜா தலைமை வகித்தார்.

ஒன்றியச் செயலர் வி. ராஜலிங்கம் அறிக்கை வாசித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் க.சிவக்குமார், விவசாய தொழிலாளர்கள் சங்க நிர்வாகி ஏ. செந்தமிழ்ச்செல்வன், ஜனநாயக வாலிபர் சங்க நிர்வாகி தமிழரசன் ஆகியோர் பேசினர்.

## 650 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி

சிவகங்கை மாவட்டத்தில் 650 ஹெக்டேரில் திருந்தியநெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 85 ஹெக்டேரில் துவரை நடவு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு விவசாய பருவத்தில் சிவகங்கை மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 25 ஹெக்டர் நெல் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 650 ஹெக்டரில் நெல் நடவு பணிகள் நடைபெற்றுள்ளது.

காட்டாம்பூர் கிராமத்தில் 5 ஹெக்டர் அளவில் திருந்திய நெல் சாகுபடி மூலம் நெல் நாற்று நடவு செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் ராஜாராமன் நேரடியாக ஆய்வு செய்தார். இந்த சாகுபடி முறையில் ஒரு ஏக்கருக்கு 3 டன் நெல் மகசூல் கிடைக்கும் என அப்போது ஆட்சியர் தெரிவித்தார்.

திருக்காளப்பட்டி கிராமத்தில் நெல் நடவு முறையில் துவரை நடவு செய்யப்பட்டு இருப்பதை ஆட்சியர் ஆய்வு செய்தார். இந்த பருவத்தில் 105 ஹெக்டரில் துவரை நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. துவரை நடவின் மூலம் ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 85 ஹெக்டரில் துவரை நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆட்சியர் தெரிவித்தார். ருமைப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு உள்ள நெல் சமுதாய நாற்றங்காலை ஆட்சியர் பார்வையிட்டார். மாவட்டத்தில் 20 ஹெக்டரில் நெல் சமுதாய நாற்றங்கால் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாகவும் அதன் மூலம் 10 ஆயிரம் விவசாயிகள் பயனடைவார்கள் என்றும் ஆட்சியர் கூறினார். இந்த ஆய்வின்போது, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் செல்லத்துரை, சிங்கம்புணரி வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன், திருப்பத்தூர் வேளாண்மை துணை அலுவலர் தனசேகரன் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
20.10.2012 A.M

## விதைநெல் கிடைக்கவில்லை:விவசாயிகள் புகார்

திண்டுக்கல்:தேவையான விதை நெல் கிடைக்கவில்லை என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.திண்டுக்கல்லில் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும்நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம், டி.ஆர்.ஓ., மனோகரன், விவசாய இணை இயக்குனர் சம்பத்குமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.விவசாய இணை இயக்குனர்: வடகிழக்கு பருவமழை பெய்யத்துவங்கி விட்டது. விவசாயிகள் நெல் மகசூலை அதிகப்படுத்த வேண்டும். பல இடங்களில் மக்காச்சோளம் அறுவடைக்கு தயாராக உள்ளது. இதுவரை 300 டன் மக்காச்÷சாளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அனைத்து ஒன்றியங்களுக்கும் நெல் விதைகள் வழங்கப்பட்டுள்ளது.விவசாயிகள்: மழை நேரத்தில் விதைநெல் கிடைக்கவில்லை. குறிப்பாக ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம் ஆகிய பகுதிகளில் தட்டுப்பாடு உள்ளது.விவசாய இணை இயக்குனர்: வேறு மாவட்டத்தில் இருந்து விதை நெல்வாங்கி விவசாயிகளுக்கு தர ஏற்பாடு செய்யப்படும்.தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர்: மா, நெல்லி கன்றுகள் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படும். ஊடுபயிராக கத்திரி, தக்காளி பயிரிடலாம். மானிய விலையில் சொட்டுநீர், நுண்நீர் பாசனத்திற்கு விண்ணப்பிக்கலாம்.விவசாயிகள்: மிளகாயை ஊடுபயிராக பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும். சொட்டு நீர் பாசனத்திற்கு விண்ணப்பித்து ஓராண்டாக எந்த பலனும் இல்லை. தாமரைக்குளத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. குமாரநாயக்கன்குளத்தில் மண்அள்ளுவதை தடுக்க வேண்டும். ரங்கசமுத்திரம் குளத்தில் 100 நாட்கள் திட்டத்தில் துர்வார வேண்டும்.கலெக்டர்: ராமராஜபுரத்தில் முதியோர் உதவித்தொகை கிடைக்க, டி.ஆர்.ஓ., மூலம் ஆய்வு நடத்தப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது

## சிறுதானிய சாகுபடி செய்ய ஊக்குவிப்பு

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்ட வேளாண் அறிவியல், திட்ட ஒருங்கிணைப்பாளர் கணேச ராஜா கூறியதாவது: ராகி, தினை, வரகு, குத்திரைபால், பணிவரகு, சாமை ஆகிய சிறு தானிய

பயிர்களில், வருமானம் குறைவு காரணமாக, விவசாயிகள் ஆர்வம் செலுத்தவில்லை. தற்போது, இவ்வகை தானியங்களுக்கு, வெளிமார்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. இப்பயிர்களின் சாகுபடியில் அதிக லாபம் ஈட்ட முடியும். விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் இடுபொருட்கள் வேளாண் துறை மூலம் வழங்கவுள்ளோம். விருப்பமுள்ளவர்கள் 04567-230250ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## கூடுதல் விலைக்கு "யூரியா' விற்பனைவிவசாயிகள் புகார்

விருதுநகர்: வெளி மார்க்கெட்டில், "பில் இல்லாமல், யூரியா' உரத்தை கூடுதல் விலைக்கு விற்பதாக, விவசாயிகள் புகார் கூறினர்.விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ஹரிகரன் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடந்தது. ராஜு டி.ஆர்.ஓ., பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். விவசாயிகள் பேசியதாவது:விஜயமுருகன்(விருதுநகர்) : வடகிழக்கு பருவமழை தொடங்கியதால், கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்து உள்ளது. கண்மாய் ஷட்டர், மடை பழுது பார்க்காததால், தண்ணீர் வீணாகிறது. மம்சாபுரம் பகுதியில், தேரியம் நைட்ரேட் தயாரிக்கும் தனியார் கம்பெனி உள்ளது. இதனால் இப்பகுதி நிலத்தடி நீர், விவசாய நிலம் பாதிப்படைவதால், தனியார் கம்பெனி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கலெக்டர்: விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.ராமச்சந்திர ராஜா(ராஜபாளையம்): ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பல பகுதிகளில்,வெளி மார்க்கெட்டில் ,பில் வழங்காமல் கூடுதல் விலைக்கு "யூரியா' விற்கப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் நடவ டிக்கை எடுக்க வேண்டும்.கணேசன்(வாடியூர்): கண்மாய் பகுதி விவசாயிகளுக்கு, கூட்டுறவு துறை மூலம், மானிய விலையில் விவசாய இயந்திரங்கள் வழங்க வேண்டும். அருப்புக்கோட்டை, தும்பக்குண்டில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சொட்டு நீர் பாசான "டியூப்' இரு அடிக்கு ஓர் ஓட்டை இருப்பதற்கு பதில் ,ஒரு மீட்டருக்கு ஒரு ஓட்டை வைத்து கொடுத்துள்ளனர்இதனால் சொட்டு நீர் பாசானம் செய்ய முடியவில்லை. "டியூப்' பை மாற்றி கொடுக்க வேண்டும்கலெக்டர்: சம்பந்தப்பட்ட நிறுவனமே, அந்த "டியூப்' களை மாற்றி, வேறு "டியூப்' வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்ஜெகநாதன், (குன்னூர்): மேற்கு தொடர்ச்சி மலையொட்டி உள்ள ஆக்கிரமிப்பால், பிளவக்கல் அணையிலிருந்து குன்னூர் கண்மாய்க்கு தண்ணீர் வருவதில்லை. இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கருப்பையா(ஸ்ரீவில்லிபுத்தூர்): ஸ்ரீவில்லிபுத்தூர், வேலாங்குளம் கண்மாய்க்கு செல்லும் கால்வாய் பள்ளமாக உள்ளதால், ஆறு ஆண்டுகளாக தண்ணீர் வருவதில்லை. கண்மாயை ஆழப்படுத்த

வேண்டும்.சேகர் (பொதுப்பணித்துறை நிர்வாக பொறியாளர்): இதற்கான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, 2014 ல் வேலை தொடங்க, நடவடிக்கை எடுக்கப்படும்.

## மழை இல்லாததால் விவசாய நிலங்கள் வறண்டு பாதிப்பு: 1.28 லட்சம் எக்டேர் சாகுபடி குறைவு

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் இந்த ஆண்டு போதுமான மழை இல்லாத காரணத்தால் 1.28 லட்சம் எக்டேர் பரப்பில் பயிர்களை பயிர் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 2,423 குளங்கள் வறண்டு காணப்படுகிறது. நெல்லை மாவட்ட பகுதிகளில் கடந்த ஒரு சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. எனினும், அணைகளில் எதிர்பார்க்கப்பட்ட மழை இல்லாததால் தொடர்ந்து நீர்மட்டம் குறைவாகவே காணப்படுகிறது. அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தற்போது ஓரளவு மழை பெய்து வருவதால் விரைவில் எதிர்பார்க்கும் நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. 37 சதவீதம் மழை குறைவு: >நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 965.07 மி.மீ மழை பெய்தது. இது இயல்பான மழை அளவை விட 18 சதவீதம் கூடுதலாகும். இந்த ஆண்டு இதுவரை 311.08 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவை விட 37 சதவீதம் குறைவாகும். 2,423 குளங்கள் வறண்டன: மாவட்டத்தில் தற்போதைய நிலவரப்படி அணைக்கட்டுகளில் 13 ஆயிரத்து 765 மி.க. அடியில் தற்போது 1,308 மி.க.அடி மட்டும் உள்ளது. கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 892 மி.க.அடி நீர் இருந்தது. மாவட்டத்தில் தற்போது மொத்தம் 2,449 குளங்களில் 2,423 குளங்கள் போதிய தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. 26 குளங்களில் ஒரு மாதத்திற்கு தண்ணீர் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயிர்கள் சாகுபடி குறைவு: மாவட்டத்தில் 2012-13ம் ஆண்டில் 90 ஆயிரம் எக்டேரில் நெல் பயிர் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 3,436 எக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டில் இதே காலத்தில் 16 ஆயிரத்து 4 எக்டேரில் நெல் பயிர் பயிரிடப்பட்டிருந்தது. மொத்தம் இந்த ஆண்டில் பல்வேறு பயிர்கள் 1.41 லட்சம் எக்டேரில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 13 ஆயிரத்து 757 எக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1.28 லட்சம் எக்டேர் பரப்பில் இந்த ஆண்டு சாகுபடி குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 28 ஆயிரத்து 119 எக்டேர் பரப்பில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தது. மாவட்டத்தில் போதுமான மழை இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு மிகவும் குறைவான அளவிலேயே பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தது. மாவட்டத்தில் தொடரும் மழை: மாவட்டத்தில் கடந்த ஒரு சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகள், குளங்களுக்கு நீர்வரத்து அதிகமாகியுள்ளது.

மாவட்டத்தில் அணை பகுதிகளை பொறுத்தவரை நேற்று காலை வரை பாபநாசத்தில் 26 மி.மீ, சேர்வலாறில் 14, மணிமுத்தாறில் 27.8, கடனா அணையில் 8, ராமநதியில் 20, கருப்பாநதியில் 21, குண்டாறில் 40, வடக்கு பச்சையாறில் 16.4, நம்பியாற்றில் 26, கொடுமுடியாறில் 15, அடவிநயினாரில் 16 மி.மீ அளவுகளில் மழை பதிவானது. ஆய்குடியில் அதிகம்: >பிற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 16.2, ஆய்குடியில் 40.2, சேரன்மகாதேவியில் 22, நான்குநேரியில் 18, பாளையில் 18.2, ராதாபுரத்தில் 24, சங்கரன்கோவிலில் 37, செங்கோட்டையில் 23, சிவகிரியில் 35, தென்காசியில் 16.10, நெல்லையில் 12, ஆலங்குளத்தில் 20 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை முதல் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லை, பாளை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தொடர்ந்து காலை முதல் விட்டு, விட்டு மழை பெய்தது. நேற்று இரவிலும் ஆங்காங்கே பரவலாக இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பதிவானது.

## பாபநாசம் அணை நீர்மட்டம் 38 அடி

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 38.01 அடியாக இருந்தது. காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதியில் போதிய மழையில்லாத காரணத்தால் பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைவாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் பருவமழையின் தாக்கத்தால் காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் நேற்று முன்தினம் லேசான சாரல் மழை பெய்தது. இதனால் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று முன்தினத்தைவிட சற்று அதிகமாகி நேற்று விநாடிக்கு 339.82 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 304.75 கனஅடி நீர் வெளியேறியது. அணைப் பகுதியில் 26 மி.மீ., கீழணையில் 16 மி.மீ., சேர்வலார் அணைப் பகுதியில் 14 மி.மீ., மணிமுத்தாறு அணைப் பகுதியில் 27.8 மி.மீ., அம்பை பகுதியில் 16.2 மி.மீ., சேரன்மகாதேவியில் 22 மி.மீ. என்ற அளவில் மழையின் அளவு பதிவாகி இருந்தது. நேற்று காலை சேர்வலார் அணையின் நீர்மட்டம் 51.84 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44.32 அடியாகவும் இருந்தது.

## நான்குநேரியில் தக்கை பூண்டு விதை வினியோகம்

வள்ளியூர் : நான்குநேரி வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் விவசாயிகளுக்கு தக்கை பூண்டு விதை வினியோகம் செய்யப்பட்டது. நான்குநேரி வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் கருமேனியாறு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தக்கை பூண்டு

விதை வினியோகம் செய்யப்பட்டது. நிகழ்ச்சிக்கு நான்குநேரி டவுன் பஞ்.,தலைவர் குபேந்திராமணி தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சவுந்தர்ராஜன் தக்கை பூண்டு விதை வினியோகத்தை துவக்கி வைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஷ் நீர்வள, நிலவள திட்டம் மற்றும் பணிகள் குறித்து பேசினார். வேளாண்மை அலுவலர் அலாய்ஸ்ராஜன் திட்ட செயல்பாடுகள் மற்றும் மானியங்கள் குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.

## மேலாத்தூரில் சூறைக்காற்றுடன் கனமழை சுமார் 5 லட்சம் வாழைகள் சேதம்:ரூ.5 கோடி நஷ்டம்

ஆத்தூர் :மேலாத்தூர் பகுதியில் சூறைக்காற்றுடன் பெய்த மழையால் சுமார் 5 லட்சம் வாழைகள் சாய்ந்தால் ரூ.5 கோடி அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆத்தூர் சுற்றுப்பகுதியில் மழை பொய்த்துப்போன சூழ்நிலையில் கடந்த 4 நாட்களாக லேசான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 17ம் தேதி மாலையில் ஆத்தூர் பகுதியில் மேகம் சூழ்ந்து மழை தூறத் துவங்கியது. சுமார் ஒரு மணி நேரம் பெய்த மழையினூடே மேலாத்தூர், சேதுக்குவாய்த்தான், சுகந்தலை, சொக்கப்பழங்கரை உட்பட ஒரு சில இடங்களில் சூறைக்காற்று வீசியது.

இந்த சூறைக்காற்றில் மேலாத்தூரிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் சுற்றளவில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 5 லட்சம் வாழைகள் ஒடிந்து சரிந்தது. மேலும் பல இடங்களில் வெற்றிலைக்கொடிகளும் மொத்தமாக சாய்த்தது. இவை தவிர அப்பகுதியில் வேம்பு, புளி, தென்னை மற்றும் பனை உட்பட பத்துக்கும் மேற்பட்ட மரங்களும் வேரோடு சாய்ந்தது. மரங்கள் ரோட்டின் குறுக்கே சாய்ந்ததால் இரவில் மேலாத்தூர் சேதுக்குவாய்த்தான் வழியில் பல மணிநேரம் போக்குவரத்து பாதிப்படைந்தது.

வரும் பொங்கலுக்கு வெட்டுவதற்கு தயாராக வாழைகளில் தார் பிடித்திருந்த நிலையில், வாழைகள் ஒட்டுமொத்தமாக சரிந்துள்ளதால், சராசரியாக ஒரு வாழைக்கு ரூ.100 வரையிலும் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். இதனால் இந்த சூறைக்காற்றால் ஏற்பட்ட சேத மதிப்பு ரூ 5 கோடியை தாண்டியுள்ளது. வழக்கமாக ஒரு வாழைக்கு ரூ 60 வரை செலவு வரும் நிலையில் இந்த ஆண்டு கூலி ஆட்கள் பற்றாக்குறையாலும், குத்தைகை ரேட் மற்றும் உர விலை உயர்வாலும் இந்த ஆண்டு சராசரி செலவு ரூ 100ஐ தாண்டியுள்ளது. ஏற்கனவே மழையின்றியும், போதிய தண்ணீர் கிடைக்காமலும் ஒரு புறம் வாழைகள் கருகி விவசாயிகள் நஷ்டமடைந்திருந்த நிலையில், இந்த சூறைக்காற்றின் கோர தாண்டவத்தால் ஏற்பட்டுள்ள எதிர்பாராத பெரும்

நஷ்டத்தால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். எனவே ஆத்தூர் பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள தொடர் சோதனைகளை கருத்தில் கொண்டு அரசு அதிகாரிகள் ஆய்வு நடத்தி நஷ்டம் அடைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தொடர்கிறது மழை மானவாரி நிலங்களில் விவசாய பணிகள் சுறுசுறுப்பு

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் மானாவாரி விவசாய நிலங்களில் விவசாயப்பணிகள் தீவிரம் அடைந்து வருகிறது. தொடர்ந்து மழை நீடிக்குமே என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டத்தில் நேற்று அதிகபட்சமாக குலசேகரப்பட்டணத்தில் 75 மிமீ மழை பதிவாகியுள்ளது.
தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அக்னிö வயிலை மிஞ்சும் அளவுக்கும் கடும் வெயில் அடித்து வந்தது. மதியம் நேரங்களில் சாதாரணமாக 90 டிகிரி வரை வெப்பம் பதிவாகியது. வடமாவட்டங்கள் மற்றும் நெல்லை கன்னியாகுமரி மாவட்டங்களில் மழைபெய்தும் தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு துளிகூட மழைஇல்லாமல் மக்கள் கடும அவதிக்குள்ளாகிவந்தனர். வற்றாத ஜீவநதியான தாமிரபரணிகூட மழையில்லாமல் வற்றிப்போனது. இதனால் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து ஆங்காங்கே தண்ணீர் பஞ்சம் தலைதூக்கியது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை சற்று முன்னதாக துவங்கியது. இதனால் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பே மாவட்டத்தில் பல இடங்களில் மழைபெய்யத்து வாங்கியது. தற்போது வங்ககடலில் இலங்கைக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியிருப்பதால் தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்யத்துவங்கியுள்ளது.
ஸ்ரீவை,திருச்செந்தூரில் வீடுகள் சேதம்: நேற்றுமுன்தினம் இரவில் பெய்த மழையினால் திருச்செந்தூரில் 2 குடிசைவீடுகளும், ஸ்ரீவைகுண்டத்தில் 1 வீடும் சேதமடைந்தது. சேதமடைந்த வீட்டை வருவாய்த்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.
மானாவாரி நிலங்களில் விவசாயப்பணிகள் தீவிரம்: தூத்துக்குடி மாவட்டத்தின் வடபகுதியில் பெரும்பாலான நிலங்கள் மானாவாரிநிலங்களே உள்ளது. தட்டப்பாறை, புதியம்புத்தூர், ஓட்டப்பிடாரம், கயத்தாறு,மீனாட்சிபட்டி, அனியாபரநல்லூர், புதுப்பட்டி, விளாத்திகுளம், கடம்பூர்,புதூர், கோவில்பட்டி, கழுகுமலை ஆகிய இடங்களில் உள்ள மானாவாரி நிலங்களில் விவசாயப்பணிகளை விவசாயிகள் துரிதப்படுத்தியுள்ளனர். எப்படியும் மழை வரும் என்ற நம்பிக்கையில் நிலங்களை உழுதுபோட்டிருந்த விவசாயிகள் தற்போது நிலங்களில் மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, பாசிப்பயிறு, உளுந்து போன்ற பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.
தொடர்ந்து போதுமான அளவு மழைபெய்தால் கடந்தாண்டில் ஏற்பட்ட நஷ்டத்தை இந்தாண்டில்

சரிக்கட்டி கொள்ளலாம் என்று விவசாயிகள் எண்ணுகின்றனர். மழையே பெய்யாமல் தொடர்ந்து ஏமாற்றி வந்த நிலையில் தற்போது பெய்யும் மழை விவசாயிகளை மட்டுமல்ல பொதுமக்களையும் மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. நேற்று மாவட்டத்தில் மொத்தம் 372 மிமீ மழை பதிவாகியுள்ளது. மொத்த மழையளவில் 19.6 சராசரியாகும்.

மாவட்டத்தில் மழையளவு
கோவில்பட்டி -13 மிமீ
ஓட்டப்பிடாரம் -6 மிமீ
சாத்தான்குளம் -16 மிமீ
ஸ்ரீவைகுண்டம் - 17 மிமீ
தூத்துக்குடி - 26.8 மிமீ
திருச்செந்தூர் - 47 மிமீ
விளாத்திகுளம் -4 மிமீ
கயத்தாறு -36 மிமீ
காயல்பட்டணம் -30 மிமீ
குலசேகரபட்டணம் - 75 மிமீ
கீழ அரசடி - 6 மிமீ
எட்டயபுரம் - 3 மிமீ
கடம்பூர் - 22 மிமீ
வேடநத்தம் -10 மிமீ
மணியாச்சி -3 மிமீ
சூரங்குடி -3 மிமீ
காடல்குடி -5 மிமீ
வைப்பாறு -34 மிமீ
கழுகுமலை - 15 மிமீ
மொத்தம் 372 மிமீ

## பாபநாசம் அணை பகுதியில் போதிய மழையில்லை: விவசாயிகள் கவலை

விக்கிரமசிங்கபுரம், அக்.20-பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழையில்லாததால் அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்பு இல்லாத நிலை இருந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தின் பல்வேறு ஊர்களில் கடந்த சில தினங்களாக பரவலாக பெய்து வருகிறது. சுமார் 3 நாட்களுக்கு முன் விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் பகுதிகளிலும் சில மணிநேரம் மழை பெய்தது. ஆனால் மாவட்டத்தின் பிரதான அணையான பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு

பகுதிகளில் போதிய மழையில்லா~த காரணத்தினால் அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்பில்லாத நிலை இருந்து வருகிறது.

இதனால் நேற்று முன்தினம் 38.30 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 38 அடியாகியது. அணைக்கு விநாடிக்கு 208.33 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 304.75 கனஅடி நீர் வெளியேறியது. பாபநாசம் அணைப் பகுதியில் 27 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 65 மி.மீ., மணிமுத்தாறு அணைப் பகுதியில் 48.2 மி.மீ., அம்பையில் 35.2 மி.மீ., சேரன்மகாதேவியில் 38.6 மி.மீ என்ற அளவில் மழையின் அளவு பதிவாகியிருந்தது.

நேற்று சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 51.41 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44.05 அடியாகவும் இருந்தது. மாவட்டத்தின் பல்வேறு ஊர்களில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழையில்லாமல் அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்பில்லாமல் இருப்பது விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## வரத்து அதிகரிப்பால் வாழை விலையில் "வீழ்ச்சி'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள், 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வாழை பயிரிட்டுள்ளனர். இந்த வாழை தற்போது அறுவடை செய்யும் தருணத்தில் உள்ளது. கடந்த சில நாட்களாக சத்தியமங்கலம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வாழை வயல்கள் ஈரமாக உள்ளது. இதனால் லேசான காற்று வீசினாலே, வாழை மரங்கள் கீழே விழுந்து, வாழை காய்கள் நாசமாகும் நிலையும் ஏற்பட்டு வருகிறது. இதனால் நேற்று சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க ஏலத்துக்கு வரும் வாழை தார்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. கடந்த வாரம் நடந்த ஏலத்தில் கதளி ஒரு கிலோ, 12 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று இதன் விலை கிலோ, 10 ரூபாயாக குறைந்தது. இதேபோல் தேன் வாழை தார் ஒன்று, 200 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், 180 ரூபாய்க்கு மட்டுமே ஏலம் போனது. செவ்வாழை ஒரு தார் ஒன்று கடந்த வாரம், 300 ரூபாய்க்கு விற்ப்பட்டது. ஆனால் நேற்று நடந்த ஏலத்தில் ஒரு செவ்வாழை தார், 260 ரூபாய்க்கு மட்டுமே விற்பனையானது.

## மானிய விலையில் வெண்டை விதை விவசாய அதிகாரி தகவல்

லாலாப்பேட்டை: "வெண்டை விதை, 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது' என, கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: வெண்டை காய்களில் வைட்டமின் ஏ மற்றும் சி சத்துகள், புரதம் மற்றும் தாது உப்புகள் அதிகம் உள்ளது. மிகவும் குறைந்த காலத்தில் நல்ல மகசூல் தரக்கூடிய பயிராகும். நல்ல வடிகால் வசதியுள்ள, எல்லா வகை மண் வகையிலும் வெண்டையை பயிரிடலாம். தற்போது, 50 சதவீத மானிய விலையில், யு.எஸ்.டி., 109 வீரிய ஒட்டு ரக வெண்டை விதைகள் வழங்கப்படுகிறது. இந்த ரகம் விதைளத்த, 40 முதல், 45 நாட்களில் அறுவடைக்கு வ ரும். காய்களின் நீளம், 15 முதல், 18 செ.மீ., வரை, இருக்கும். ஏக்கருக்கு, 10 முதல், 12 டன் வரை, மகசூல் தரும். வீரிய வெண்டை விதை தேவைப்படும் விவசாயிகள், தோட்டக்கலைத்துறை அலுவலர் களை அணுகி விதைகளை பெற்று பயனடையலாம்.

## தொடர் மழையால் விவசாயிகள் குஷி

கரூர்: மாவட்டத்தில் தொடர் ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். நடப்பாண்டு கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை, தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால், கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், கோடையை போன்று வெயில் சுட்டெரித்தது. இந்நிலையில் கடந்த, 8ம் தேதி முதல், 11ம் தேதி வரை கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், 782 மி.மீ., மழையும், சராசரியாக 39.8 மி.மீ., மழையும் பதிவானது. பிறகு, 14ம் தேதி இரவு முதல், 15ம் தேதி காலை வரை, 202 மி.மீ., மழை பெய்தது. கடந்த, மூன்று நாட்களாக கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் குறிப்பிட்டு சொல்லும்படி மழை பெய்யவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல், கரூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. மழையளவு விபரம்: (மி.மீ.,) கு ளித்தலை 14, தோகமலை 10, பஞ்சப்பட்டி 24, பாலவிடுதி 13.4, மயிலம்பட்டி 28, கிருஷ்ண ராயபுரம் 9.2, மாயனூர் 5, குளித்தØ ல 14, கடவூர் 18.20 ஆகிய அளவுகளில் மழை பெய்தது. மா வட்டம் முழுவதும் 124.16 மி. மீ., மழை பெய்தது. சராசரியாக 10.35 மி.மீ., கரூர் மாவட்டத்தில் ம ழை பதிவாகியுள்ளது. பரவலான மழை பெய்து வருவதால், கரூர் மாவட்ட விவசாயிகள், சாகுபடி பணியை துவங்கியுள்ளனர்.

## அரணாரையில் விழிப்புணர்வு முகாம் கால்நடை மருத்துவ முகாம் நடப்பு

பெரம்பலூர்: அரணாரையில் நடந்த ஐந்து நாள் சிறப்பு விழிப்புணர்வு முகாமில் ரத்தவகை கண்டறிதல், கால்நடை மருத்துவ முகாம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தது. பெரம்பலூர் அருகே அரணாரையில், குரும்பலூர் பாரதிதாசன் பல்கலை உறுப்பு கல்லூரியின்

சமூகப்பணித்துறை முதுகலை, முதலாமாண்டு மாணவர்கள் சார்பில், ஐந்து நாட்கள் நடந்த கிராம விழிப்புணர்வு முகாமின் நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா நடந்தது.

அரணாரையில் முகாம் நடந்த நாட்களில் ரத்தவகை கண்டறிதல், துப்புரவு, கால்நடை மருத்துவமுகாம், தோட்டக்கலையின் பயன்கள், காளான் வளர்ப்பு, இயற்கை விவசாயித்தின் முக்கியத்துவம், மரக்கன்று நடுதல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தது. நிகழ்ச்சிக்கு பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் உமாவதி தலைமை வகித்தார். முகாம் ஒருங்கிணைப்பாளர் ஆனந்தராஜ், தரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வக்கீல் நீதிராஜா, ஆசிரியர் முருகேசன் உட்பட பலர் பேசினர். டி.ஆர்.ஓ., சுப்ரமணியன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, விளையாட்டு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் பங்கேற்றனர். முன்னதாக மாணவர் அறிவரசன் வரவேற்றார். முடிவில் மாணவி பூங்கொடி நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்கள் ராஜசேகரன், நிவாஸ், முபினா மற்றும் சமூகத்துறை மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.

## ஒரே நாளில் 15 காசு சரிவு தமிழகம், கேரளாவில் முட்டை விலை 300 காசு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில், முட்டை, 15 காசு சரிந்திருப்பது, கோழிப் பண்ணையாளர்களை கலக்கமடையச் செய்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 315 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசு சரிந்து, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில், முட்டை, 15 காசு சரிந்திருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின், நாமக்கல் மண்டல சேர்மன் டாக்டர் செல்வராஜ் கூறுகையில், ""வட மாநிலங்களில், தஸரா பண்டிகை நடந்து வருகிறது. அதன் காரணமாக, இறைச்சி நுகர்வு குறைந்துள்ளது. எனவே, அங்கு முட்டை விலை குறைந்துள்ளது. அதனால், இங்கும், முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. இவ்விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளது,'' என்றார்.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:

சென்னை, 315 காசு, பெங்களூரு, 290 , மைசூரு, 290 , ஹைதராபாத், 280 , மும்பை, 310 , விஜயவாடா, 282 , கோல்கத்தா, 330 , பார்வாலா, 307, டில்லி, 320 காசு.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 52 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 57 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## வாணியாறு அணை நீர் மட்டம் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

